**OS.No.98/2021 P.W.1-சீனிவாசன் 10.04.2026**

<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

நான் திருப்போரூர் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் பேரில் தான் என் முன் காட்டப்படும் பி.சா.ஆ.1 CSR கொடுத்தார்கள் என்றால் சரிதான். ` பி.சா.ஆ.1 CSR தற்போது நிலுவையில் உள்ளதா என்றால் காவல் நிலையத்தில் விசாரணை செய்து பிரச்சனையை நீதிமன்றத்தில் முடித்து கொள்ளுங்கள் என்று தெரிவித்தார்கள். நான் புகாரில் என்ன தொகை பிரதிவாதிகளிடமிருந்து வரவேண்டுமென்று குறிப்பிட்டிருந்தேனோ அந்த தொகையை தான் பி.சா.ஆ.1 CSR -ல் குறிப்பிட்டுள்ளார்கள் என்றால் சரிதான். நான் பி.சா.ஆ.1 CSR வாங்கினேனா என்றால் ஞாபகமில்லை. எந்த தேதியில் காவல் நிலையத்தில் எங்களை விசாரித்தார்கள் என்றால் 2 நாட்கள் கழித்து விசாரித்தார்கள். நான் புகாரின் பேரில் நீதிமன்றத்தில் பார்த்து கொள்ளுங்கள் என்று தெரிவித்த பிறகு புகாரின் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று காவல் நிலைய மேலதிகாரிகளை சென்று பார்த்தேனா என்றால் இல்லை. பி.சா.ஆ.1-ல் ரூபாய் 20 லட்சம் குறித்து குறிப்பிடவில்லை என்றால் நான் புகார் கொடுத்த சமயத்தில் நான் ரூபாய் 20 லட்சம் பிரதிவாதிக்கு கொடுத்ததற்கான ஆவணம் இல்லாததால் தான் ரூபாய் 20 லட்சம் பற்றி புகாரில் குறிப்பிடவில்லை. ஆவணம் இல்லை என்றாலும் பிரதிவாதி என்னிடமிருந்து ரூபாய் 20 லட்சம் பெற்று கொண்ட விவரத்தை புகாரில் சொல்லியிருக்கலாம் என்றால் சரிதான். பிரதிவாதி என்னிடமிருந்து ரூபாய் 20 லட்சத்தை வா.சா.ஆ.2 முன்னிலைக்கு பெறவில்லை என்றும், புகார் கொடுத்த பிறகு பிரதிவாதி எனக்கு வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு அனுப்பினார் என்றும், அதன் பிறகு தான் வா.சா.ஆ.2 ஆவணத்தை மோசடியாக தயார் செய்தேன் என்றும் சொன்னால் சரியல்ல. அதனால் தான் பி.சா.ஆ.1-ல் ரூபாய் 20 லட்சம் பற்றி எந்த விவரமும் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. 06.02.2008 தேதியிட்ட வா.சா.ஆ.1 மற்றும் 06.07.2010 தேதியிட்ட வா.சா.ஆ.2 ஆவணங்களுக்கு பிறகு 2020ம் ஆண்டு வரை எழுத்து பூர்வமாக எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். நான் ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறேன் என்றால் சரிதான். அதனால் எனக்கு ஒரு கிரய ஒப்பந்தம் ஏற்படுத்தினால் எவ்வளவு நாட்களுக்குள் கிரயம் பதிவு செய்யப்பட வேண்டுமென்ற விவரம் தெரியும் என்றால் சரிதான். ஆனால் அவர்

நூலக கட்டிடத்தை இடித்து தர நடவடிக்கை எடுக்கவில்லை. மேலும் சொத்து சம்பந்தமாக அரசுக்கும், பிரதிவாதிக்கும் இடையில் வழக்கும் நிலுவையில் இருந்தது. எனவே நான் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. வா.சா.ஆ.2க்கு பிறகு 2013ல் நான் சொத்தை எழுதி தருமாறு கேட்டு அறிவிப்பு அனுப்பினேனா என்றால் கட்டிடத்தை இடிக்காததால் நான் அனுப்பவில்லை. வழக்கு சொத்து யாருடைய அனுபவத்தில் உள்ளது என்றால் பிரதிவாதியின் அனுபவத்தில் உள்ளது. 2008லேயே நூலகத்தை காலி செய்து விட்டார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வா.சா.ஆ.1-ல் நூலக கட்டிடத்தை இடித்து காலி செய்து தர வேண்டுமென்ற விவரம் இல்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.3-லும் நூலக கட்டிடத்தை காலி செய்து தரும்படி கூறியுள்ளேன் என்றால் சரிதான். ஆனால் நூலக கட்டிடத்தை இடித்து தரும்படி கேட்கவில்லை.

(நேரமின்மையால் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)